1973 டிசம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளை கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளை கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1973) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பேரவை விதி 21 (3)-ன் கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"நிகழ்ச்சி நிரலில் உள்ள இனம் 3—அரசினர் தீர்மானத்தை, இனம் 2, உள் இனம் (4)-க்கு அடுத்து எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.